**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE COURT, HOSUR**

S.C. Case No : 48/2020

Deposition of witness for Prosecution : Pw3

Defence :

Name : Mahalakshmi
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed and on date 02.11.2021 in accordance with the provision with the Act of 1983.

முதல் விசாரணை :

நான் எழில் நகர் பேகுபள்ளியில் குடியிருக்கிறேன். அ.சா.1எனது கணவர்.அ.சா2. எனது மகன்.எதிரி என் பக்கத்து வீட்டுக்காரர்.நாங்கள் வெல்டிங் கம்பெனி வைத்துள்ளோம்.05.10.2019 அன்று காலை 8.30 மணிஅளவில் சந்தியா இஞ்சினியரிங் கம்பெனிக்கு நான் என் கணவர் , என் மகன், வேலைசெய்யும் 2 நபர்கள், மற்றும் கணவரின்தம்பி ஆகியோர் சென்றோம். வேலைசெய்யும் நபர்களின் பெயர் ஸ்ரீதர்மற்றும் நாகா. வாழை செடிகளை நாகா என்பவர் வெட்டினார்.வாழை செடிகள் மீது எதிரி எச்சில் துப்பினார். ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று எதிரியை கேட்டேன். அதற்கு எதிரி நான்அப்படி தான் துப்புவேன் என்று சொன்னார். நான் ஏன் இப்படி பேசுகிறீர் என்று கேட்டேன்.அதற்கு எதிரி அப்படி தான் பேவுவேன் என்று சொல்லி தேவடியா,கண்டார ஓளி என்று சொன்னார். அருகில் இருந்த என் கணவர் வந்து ஏன் எனது மனைவியை இவ்வாறு பேசுகிறாய் என்று கேட்டார்.அதற்கு எதிரி அப்படி ˙தான் பேசுவேன்.சரியான ஆம்பளையாஇருந்தால் இங்கே இரு வருகிறேன் என்று சொல்லி அவர் வீட்டிற்கு சென்றார். பூஜைக்கு வெட்டிய வர்ழை மரத்தில் எச்சில் உமிழ்ந்ததால் அதை பயன்படுத்த முடியாது என்று எனது கணவர் சொல்லி வேறு மரம் வாங்கி கொல்லலாம் என்று வெளியில் செல்ல முயற்சி செய்தோம்.அப்பொழுது எதிரி எங்கள் பின்புறமாக வந்து இத்துடன் செத்துதொலை என்று கொடுவாலால் எனது கணவரைவெட்டினார்.

எனதுமகன் அதை தடுத்ததில் எனது மகனின் இடதுகை பெருவிரலில்காயம் ஏற்பட்டது. அவனது பெருவிரல் துண்டாகி இருந்தது. எனது மகன் தடுக்காமல்இருந்திரந்தால்எ னது கணவர்இறந்திருப்பார். எனது கணவருக்கு அவரது கழுத்தின் பின்புறம் வெட்டு காயம் ஏற்பட்டது. நான் சத்தம்போட்டேன். அவர்களை காரில் அழைத்துக்கொண்டு அரசு மருத்துவமனைக்கு சென்றோம். கம்பெனி நடைபெறுகிறது. பசுமை நீதிமன்றத்தில் எங்களுக்கு சாதகமாக தீர்ப்பு வந்தது. அதனால் எனதுகணவரை கொல்லாமல் விட மாட்டேன் என்று எதிரி சொல்லி வ்நதார். அதன்பிறகு குணம் மருத்துவமனயைில் அ.சா.1 மற்றும் 2 சிகிச்சை பெற்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். நீதிமன்றத்தில் உள்ள சா.போ.1 தான் எனது கணவரை வெட்ட எதிரி பயன்படுத்தியது.

குறுக்கு விசாரணை:

போலிசார் என்னை விசாரித்த போது நான் சொன்னதை ஒரு பேப்பரில்எழுதிக்கொண்டார்கள். வாழைமரம் வெட்டிய இடம் எங்களுக்கு சொந்த இடம். எதிரியும் அவரது வீட்டு காம்பவுண்டுக்குள் நின்ற தான் என்னை திட்டினார். நாங்கள் வாழை மரம் இருக்கும் இடத்திலிருந்து சென்று கொண்டிருந்தபோது எதிரி பின்புறமாக வந்து வெட்டினார். வாழை மரம் இருக்கும் இடத்திற்கும் எதிரி வெட்டிய இடத்திற்கும் 4 அடி தூரம் இருக்கும். சுமார் 10 ஆண்டுகளாக எங்களுக்கும் எதிரிக்கும் விரோதம்இருந்தது. கத்தியை எதிரி என்ன செய்தார் என்று எனக்கு தெரியாது.நான் பதட்டத்தில் பார்க்கவில்லை. என் வீட்டிலிருந்து காவல்நிலையம் தான் அருகிலுள்ளது. சம்பவ இடத்தில் நாங்கள் 6 பேர் இருந்தோம். மருத்துவமனைக்கு நாங்கள் காரில் தான் சென்றோம். மருத்துமனைக்கு செல்லும்போது காவல் நியைலத்தில் புகார் கொடுத்துநாங்கள் செல்லவில்லை. சா.போ.1ல் ஒருஅடிக்கு ரத்தக்கறை உள்ளது என்று சொன்னால் சரிதான். ஒருஅடி நீளத்தில் அ.சா.1 மற்றும் 2க்கு காயம் ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் அது எனக்குத் தெரியாது. மருத்துவரிடம் எனதுகணவர் தான் தகவல் சொன்னார்.மகனுக்கு அருவை சிகிச்சை செய்யப்பட்டது.சா.போ1 வழக்கிற்காக தயார்செய்யப்பட்டது என்று சொன்னானல் சரியல்ல. சா.போ.1க்கும் எதிரிக்கும்எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால்சரியல்ல.நான் சொன்ன நேரம்,சொன்ன விதத்தில்சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2வது முறை போலிசார் என் வீட்டில்வைத்து என்னை விசாரித்தார்கள்.முதல்முறை மருத்துவமனயைில் வைத்து என்னை விசாரித்தார்கள். எனது கம்பெனிக்கு அருகில் வேப்ப மரம் உள்ளது என்று சொன்னால்வாழை செடி இருக்கும் இத்தில் இருந்து 40 அடி தூரத்தில் வேப்ப மரம் உள்ளது. எனது மகன் வேப்ப மரத்தில் கிளைகளை வெட்டினார் என்றும் அப்பொழுது அவரது கையில் காயம் ஏற்பட்டது என்றும் அதனால் அவர் கத்தயை கீழே போட்டதில் மரத்திற்குஅடியில் நின்றிருந்த எனதுகணவரின் கழுத்தில கத்தி பட்டு என் கணவருக்கும் மகனுக்கும் காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. என்னை 2முறை போலிசார் விசாரித்த போதும் நான் சா.போ.1கத்தி என்ன ஆனது என்று சொல்லவில்லை.